கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம். திருமங்கலம்

**21.02.2023**

**அசல் வழக்கு எண்**. 100/2018

**பி.வா.சா. 1 – ராமச்சந்திரன்**

**பிரதிவாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**

**ஆரம்பித்த நேரம் : 2.45 PM**

கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கத்தின் சீதாலெட்சுமி மில்ஸ் திருநகர் கிளையில் தொழிலாளர், நிர்வாகி கூட்டு நடவடிக்கை தொடர்பான மினிட் புத்தகத்தின் அசல் **பி.வா.சா.ஆ.4**. மதுரை மாவட்ட நூற்பு நெசவு தொழிலாளர் HMS சங்கத்தின் மகாசபைக் கூட்ட மினிட் புத்தகத்தின் அசல் **பி.வா.சா.ஆ.5**. 05.02.2003 தேதியிட்ட மதுரை மாவட்ட நூற்பு நெசவு தொழிலாளர் HMS சங்கத்தின் பதிவுச்சான்றிதழ் அசல் **பி.வா.சா.ஆ.6**. 20.01.1979 தேதியில் அனைத்து தொழிலாளர் சங்க பிரதிநிதிகள் கூட்டத்தில் ஏற்பட்ட தீர்மான நகல் **பி.வா.சா.ஆ.7**. சீதாலெட்சுமி மில்ஸ் கிளையின் அனைத்து சங்கம் சார்பாக 03.07.1983ம் தேதி திருநகர் சீதாலெட்சுமி மில்ஸ் மேனேஜருக்கு அனுப்பிய தீர்மானங்களின் நகல் **பி.வா.சா.ஆ.8**. 01.10.1991 தேதியில் அரசு செயலாளர் அவர்களால் சென்னையில் உள்ள அரசு மத்திய பதிப்பகத்தின் works Manager க்கு அனுப்பிய கடிதம் மற்றும் Industrial tribunal ஆல் கொடுக்கப்பட்ட Award நகல் **பி.வா.சா.ஆ.9**. சீதாலெட்சுமி மில்ஸ் வாதியாக இருந்து என் மீதும், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மீதும் திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 254/1987 என்ற வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட பிராதின் நீதிமன்ற சான்றிட்ட நகல் **பி.வா.சா.ஆ.10**. 26.08.1988ம் தேதி அரசு செயலாளர் அவர்களால் கொடுக்கப்பட்ட அறிவிக்கை நகல் **பி.வா.சா.ஆ.11**. 16.07.1991ம் தேதி மதுரை முதன்மை தொழிலாளர் நீதிமன்றத்தால் இ.ம.எண்.290/1990ல் ID No.324/89ல் வழங்கப்பட்ட உத்தரவின் சார்பு நகல் **பி.வா.சா.ஆ.12**. கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கம் கிளை சீதாலெட்சுமி மில்ஸ் திருநகர் சார்பாக என்னால்

சீதாலெட்சுமி மில்ஸ் மேலாளர் அவர்களுக்கு கடந்த 23.10.1991ம் தேதியில் அனுப்பப்பட்ட கடிதம் மற்றும் அந்த கடிதத்தை சீதாலெட்சுமி மில்ஸ் மேலாளர் அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை மற்றும் அஞ்சலக ரசீது (எண்ணம் 3) **பி.வா.சா.ஆ.13**. 28.07.1992ம் தேதி தமிழ்நாடு Industrial Tribunal ஆல் ID No. 65/92ல் பிறப்புவிக்கப்பட்ட அழைப்பாணை **பி.வா.சா.ஆ.14**. A.முகம்மது பிச்சை வகையறாக்களால் திருநகரில் உள்ள சீதாலெட்சுமி மில்ஸ் லிமிடெட் நிர்வாகத்தின் மீது திருமங்கலம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தின் அசல் வழக்கு 636/1992 என தாக்கல் செய்யப்பட்ட பிராது நகல் நீதிமன்ற சான்றொப்பம் இடப்பட்டது. **பி.வா.சா.ஆ.15**. HMS சார்பாக செயலாளர் அவர்களால் மதுரை செனாய் நகரில் உள்ள தொழிலாளர் நல அலுவலர் அவர்களுக்கு 05.03.2002ம் தேதி தொழில் தகராறு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம் தொழிலாளர் துறை அலுவலர் அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை, அஞ்சல் அலுவலக ரசீது (எண்ணம்–3) **பி.வா.சா.ஆ.16**. HMS சார்பாக செயலாளர் அவர்களால் புதுதில்லியில் உள்ள labor and finance board அவர்களுக்கு 06.11.2003ம் தேதி தொழில் தகராறு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம், labor and finance board அதனை பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை, அஞ்சல் அலுவலக ரசீது (எண்ணம் –3) **பி.வா.சா.ஆ.17**. HMS சார்பாக செயலாளர் அவர்களால் மதுரை கே.கே.நகரில் உள்ள labor அலுவலர் அவர்களுக்கு 30.08.2004ம் தேதி அனுப்பப்பட்ட கடிதம் **பி.வா.சா.ஆ.18**. HMS சார்பாக செயலாளர் அவர்களால் தமிழக முதலமைச்சர் மற்றும் நான்கு அரசு அலுவலகத்திற்கு 15.03.2005ம் தேதி தொழில் தகராறு தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம், அதனை அவர்கள் பெற்றுக் கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை (எண்ணம் –2) **பி.வா.சா.ஆ.19**. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் HMS யூனியன் செயலாளர் அவர்களால் சீதாலெட்சுமி மில்ஸ் Managing Director மற்றும் 4 நபர்கள் மீது WP No. 42472/2006 என தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனு அலுவலக நகல்

**பி.வா.சா.ஆ.20**. 07.05.2007 ம் தேதி HMS ஆல் மதுரையில் உள்ள Madurai District Spinning and Weaving laborers HMS Association மதுரைக்கு வழங்கப்பட்ட சான்றிதழின் நகல் **பி.வா.சா.ஆ.21**. 02.03.2009 ம் தேதி HMS செயலாளர் அவர்களால் தகவல் உரிமை சட்டத்தின் கீழ் கேட்கப்பட்ட கேள்விகளுக்கு Regional P.F.Commissioner–II (Admn) அவர்களால் வழங்கப்பட்ட பதில் **பி.வா.சா.ஆ.22**. 17.09.2010 ம் தேதி HMS செயலாளர் சி.சுந்தரம் அவர்களுக்கு Regional P.F.Commissioner–II (Admn) அவர்களால் அனுப்பப்பட்ட கடிதம் **பி.வா.சா.ஆ.23**. 24.08.2010 ம் தேதி HMS செயலாளர் சி.சுந்தரம் அவர்களால் மதுரையில் உள்ள வருங்கால வைப்பு நிதி அலுவலக பிராந்திய ஆணையாளருக்கு பதிவுத் தபால் ஒப்புதல் அட்டையுடன் அனுப்பிய கடிதம் அஞ்சல் ஒப்புகை அட்டையுடன் **பி.வா.சா.ஆ.24**. 11.11.1984 ம் தேதி சீதாலெட்சுமி மில்ஸ் அனைத்து தொழிற்சங்க நிர்வாகிகள் சார்பாக சீதாலெட்சுமி மில்ஸ்ன் பொதுமேலாளர் மூலம் உற்பத்தி துறை மேலாளருக்கு அனுப்பிய கடிதம் அசல் **பி.வா.சா.ஆ.25**. 27.07.1984 ம் தேதி மதுரை தொழிலாளர் துணை ஆணையாளர் அவர்களால் கூட்டம் ஒத்தி வைத்தது தொடர்பாக அனுப்பப்பட்ட கடிதம் **பி.வா.சா.ஆ.26**. பல்வேறு தேதிகளில் மதுரை தொழிலாளர் உதவி ஆணையர் அவர்களால் அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் (எண்ணம் 15) **பி.வா.சா.ஆ.27**. பல்வேறு தேதிகளில் மதுரை முதல் வட்டம் தொழிற்சாலை ஆய்வாளர் அவர்களால் அனுப்பப்பட்ட அழைப்பாணைகள் (எண்ணம் 12) **பி.வா.சா.ஆ.28**. 12.07.2007 ம் தேதி மதுரை தொழிலாளர் அலுவலர் அவர்களால் பிறப்புவிக்கப்பட்ட சமரச முறிவறிக்கை சார்பு நகல் **பி.வா.சா.ஆ.29**. 29.01.1976 ல் தொழிற்சங்க நிர்வாகிகளுக்கும், சீதாலெட்சுமி நிர்வாகத்திற்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தம் **பி.வா.சா.ஆ.30**. 05.08.2004 ம் தேதி HMS சங்க தீர்மான மினிட் நோட்டின் அசல் **பி.வா.சா.ஆ.31**. அரசு முதன்மை செயலாளர் அவர்களால் 24.09.2013 ம் தேதி சமரச முறிவறிக்கையின் அடிப்படையில் தொழில் தீர்ப்பாயத்தின் தீர்ப்புக்கு அனுப்புதல் தொடர்பாக வெளியிடப்பட்ட அரசாணை **பி.வா.சா.ஆ.32**. HMS யூனியன் செயலாளர் அவர்களுக்கு 11.09.2013 ம் தேதி TamilNadu Industrial Tribunal ஆல் அனுப்பப்பட்ட அழைப்பாணை **பி.வா.சா.ஆ.33**. HMS யூனியன் செயலாளர் அவர்களுக்கு 24.09.2013 ம் தேதி TamilNadu Industrial Tribunal ஆல் அனுப்பப்பட்ட அழைப்பாணை **பி.வா.சா.ஆ.34**. HMS சங்கத்தின் சார்பாக 07.09.1990 ம் தேதி

செயலாளர் அவர்களால் உண்ணாவிரத போராட்டம் நடத்துவது தொடர்பாக கொடுக்கப்பட்ட அறிவிப்பு **பி.வா.சா.ஆ.35**. 10.11.2008 ம் தேதி HMS செயலாளர் அவர்களால் சீதாலெட்சுமி மில்ஸ் நிர்வாகத்திற்கு Commissioner Provident Fund Office ஆகியோர்களுக்கு அனுப்பிய கடிதம் **பி.வா.சா.ஆ.36**. HMS தொழிற்சங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகள் தொடர்பாக ஏற்பட்ட மினிட் புத்தகம் அசல் **பி.வா.சா.ஆ.37**. (பி.வா.சா.ஆ.4 முதல் 37 வரையிலான ஆவணங்கள் பற்றி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லப்படாமல் உள்ளது என்று வாதி தரப்பில் ஆட்சேபனை செய்யப்பட்டது. மேற்கண்ட ஆட்சேபனையின்பேரில் ஆவணங்கள் குறியீடு செய்யப்படலாம் என்று வாதி தரப்பில் எடுத்துரைக்கப்பட்டது. மேற்கண்ட ஆட்சேபனை தொடர்பாக இருதரப்பினர்களும் வழக்கின் இறுதி வாதுரையின்போது வாதம் செய்து கொள்ளலாம் என்ற அடிப்படையில் தற்சமயம் இந்த ஆட்சேபனை நிறுத்தி வைக்கப்பட்டது).

(வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை செய்ய வழக்கு வேறு ஒரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது).

**முடிவடைந்த நேரம் : 04.05 PM**